NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 29 January 2019

# விவியன்: உலக இடையூறுகளை வென்று சாதிக்க 3 வழிகள்

சீர்குலையும் உலக ஒழுங்கையும் அதிகரிக்கும் மின்னியல் இடையூறுகளையும் தாண்டிச் செல்லக் கூடிய பொருத்தமான வழியை சிங்கப்பூர் தொடருவது அவசியம் என்று வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலான வெளிநாட்டு கொள்கை கோட்பாடு 1965 முதல் சிறப்பான ஒன்றாக நீடித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



மாநாட்டில் அமைச்சர் விவியன். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கொள்கை ஆய்வுக் கழகம் எற்பாடு செய்த 'சிங்கப்பூர் கண்ணோட்டம் 2019' மாநாட்டில் உரை நிகழ்த்திய அவர், சிங்கப்பூர் சாதிக்க மூன்று வழிகளை மேற்கோள் காட்டினார்.

வெளிப்படைத்தன்மையைத் தொடருவது, பலதரப்பு முறையைப் பலப்படுத்த பணியாற்றுவது, இதர ஆசியான் நகரங்களுடனும் பங்காளித்துவத்தைப் பரவலாக்குவது போன்றவை அந்த மூன்று வழிகள் என்றார் அவர்.

“எந்தவோர் இயற்கை வளமும் இல்லாத சிறிய நகரமான சிங்கப்பூர், வர்த்தகத்துக்கு ஏதுவானதாக எப்போதும் திகழ வேண்டும். திறனாளர்களை ஈர்க்க வேண்டும். எல்லோரது நம்பிக்கையைப் பெறவும் ஒருங்கிணையவும் சிங்கப்பூரின் நற்பண்பு நல்லமுறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்,” என்றார் டாக்டர் விவியன்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.